**Minutes of the Public Hearing conducted on 29.10.2021 at 11a.m. at Sathya Mahal, Thoothukudi – Tirunelveli Main Road, Pudukottai Village, Thoothukudi Taluk, Thoothukudi District for the proposed Rough Stone & Gravel Quarry namely M/s. Tmt. T. Palavesammal Rough Stone and Gravel Quarry, at S.F.No.389/1B (Over an extent of 2.23.0 Ha in patta lands), Melathattaparai Village, Thoothukudi Taluk, Thoothukudi District.**

Participants:

| | | |
|---|---|---|
| 1. | Dr. K. Senthil Raj, IAS., | District Collector, Thoothukudi. |
| 2. | Thiru. S. Sathiaraj, M.Tech., | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Thoothukudi. |
| 3. | Project Proponent and her representatives and the public | As per Attendance Register (A copy of the Attendance Register is attached in Annexure - II). |

At the outset, the District Environmental Engineer, TN Pollution Control Board, Thoothukudi welcomed the esteemed District Collector, Thoothukudi District who was present to preside over the public hearing meeting and also welcomed the project proponent and her representatives and all the public who were present to attend the public hearing meeting and explained the purpose of the meeting and also about the project. The esteemed Thoothukudi District Collector then opened the meeting and discussed the project. The details about the project was then explained on behalf of the factory by the representative of the project. After this the public expressed their views.

**I. Following are the views expressed by the public during the Public Hearing meeting:**

1. **Mr. U. Sudalai, Mela Thattaparai:**

   - In my village a lot of stone quarries were under operation in the previous years. At present, no stone quarries are in existence. Hence, if the quarries are allowed to operate continuously we will get Rough stones, Jellies and Gravel in cheaper price and will also get job opportunities. Hence, I request to give permission to establish this quarry.

2. **Mr. T. Gopalakrishnan, Mela Thattaparai:**

   - In Mela Thattaparai Village the Industrial Development was not up to the mark and inadequate. There are no job opportunities due to non operation of quarries. Hence, I request to issue permission to establish this quarry, so that there will be job opportunities.

3. **Mr. P. Veyilraj, Keela koottudankadu:**

   - I welcome the establishment of this Rough Stone and Gravel Quarry because for many days the people in this locality suffer due to lack of job opportunities. Hence, please take steps to arrange for job opportunities.

4. **Mr. Lakshmanan, Mela Thattaparai:**

   - This quarry should be established in our village because people will get more job opportunities.
   - Five, Six years back a lot of quarries were in existence in our village and we got more job opportunities. But, now we are forced to move out for jobs in nearby areas. But, the jobs are temporary and again we are returning back to our village. Hence, one or even if two quarries starts operation, it will be good for us.
   - Also, this will increase the job opportunities for the people in the nearby villages as like Keezha Thattaparai, Umarikottai and Kallamparumbu etc. Hence, I request to issue permission to start this quarry.

5. **Public who did not disclose his name:**

   - Our village is the Mother Village for the surrounding villages like Keezha Thattaparai, Umarikottai, Madathupatti etc. Previously, we survived due to these quarries and these were the lifeline for us. Here, literate people as well as illiterate peoples both are there in our village.
   - The illiterate people don't know any other jobs except quarry related works. They are struggling for job opportunities and moving to nearby places for jobs. Hence, we request to return our lifeline and request to issue permission to start this quarry.

6. **Mr. Shanmugasundaram, Member, 9th Ward, Mela Thattapparai:**

   - Initially 12 No of quarries were in existence in our village. But, at present only two quarries are there. If Government permits to operate more quarries in our locality, it will increase the job opportunities for our village people and it will increase the trade in this area. Hence, I request to issue permission to operate this quarry.

7. **Mr. Santhanamari, Mela Thattapparai:**

   - My parents worked in stone quarries and with the earnings from the quarries we grown up. For many years stone quarries are not in operation. Hence, lot of people are suffering due to lack of jobs opportunities.

- Hence, I request to issue permission to operate this quarry and this will be helpful for many people.

8. **<u>Mr.Ponnudurai, Mela Thattapparai:</u>**

   - We will get Rough Stones and Gravel easily if this quarry is permitted to operate in this area. Hence, I request to issue permission to operate this quarry.

9. **<u>Mrs. Panchali, Melatattapparai:</u>**

   - We are wandering without jobs. Hence, kindly arrange to get jobs.

10. **<u>Mr.Lakshmanan, Keezha Thattapparai:</u>**

    - We are having transport vehicles. Due to huge demand for stones and sand, we are not getting offers for running out business. Hence, please take necessary steps to get the same.

II. The views/comments received from the public in writing (29 Nos) in support of this project are enclosed herewith (Annexure-III).

III. The views/comments received in writing through E-mail from Thiru.N.Shanmugam, BSc., PGDCA., LL.B., (Anti-Illegal Stone Quarry movement, Tamil Nadu Environment Protection movement, 47-A, Pasupathi Layout, Karur – 639001) against this proposed project and requesting not to conduct this public hearing is enclosed herewith (Annexure - IV).

**<u>The following documents are enclosed herewith in connection with the public hearing:</u>**

1. Compact Discs (CD) consisting of the Recorded Video (2-Nos) of the entire public hearing proceedings (Annexure – I).
2. List of participants who attended the public hearing (Annexure – II).
3. Written views/comments received in support of this project (Annexure – III).
4. The views/comments received in writing against this project and requesting not to conduct this public hearing is enclosed herewith (Annexure – IV).

S. Sathuy 15/11/17

District Environmental Engineer,
Tamil Nadu Pollution Control Board,
Thoothukudi.

District Collector
Thoothukudi

3/7

**தூத்துக்குடி மாவட்டம் , தூத்துக்குடி தாலுகா, மேலதட்டப்பாறை கிராமம் புல எண்: 389/1B-ல் 2.23.0 ஹெக்டேர் நிலப்பரப்பில் அமையவுள்ள முன்மொழியப்பட்ட திட்டமான தி/ள். T. பலவேசம்மாள் கல் மற்றும் சரளை குவாரி என்ற திட்டத்திற்கு 29.10.2021 காலை 11.00 மணிக்கு தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி - திருநெல்வேலி மெயின் ரோடு, புதுக்கோட்டை, சத்யா மஹாலில் வைத்து நடைபெற்ற பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்ட நடவடிக்கை பற்றிய விவரங்கள்:**

பங்கேற்றவர்கள்:-

| | | |
|---|---|---|
| 1. | Dr. கி. செந்தில் ராஜ், ஐ.ஏ.எஸ், | மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி |
| 2. | திரு. சு. சத்தியராஜ் எம்.டெக்., | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தூத்துக்குடி. |
| 3. | தொழிற்திட்ட உரிமையாளர் மற்றும் அவரது பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் | வருகை பதிவேட்டின் படி (வருகை பதிவேட்டின் நகல் இணைக்கப்பட்டுள்ளது) இணைப்பு - II |

முதலாவதாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தூத்துக்குடி அவர்கள் இந்த கூட்டத்தை தலைமை ஏற்று நடத்த வருகை தந்த மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களையும், இத்தொழிற்திட்டத்தின் உரிமையாளர் மற்றும் பிரதிநிதிகளையும் கூட்டத்தில் கலந்து கொள்ள வருகை தந்த அனைத்து பொதுமக்களையும் வரவேற்று இந்த கூட்டம் நடைபெறவுள்ளதின் நோக்கத்தையும் இந்த திட்டம் பற்றியும் எடுத்துரைத்தார். பின்னர் மதிப்பிற்குரிய தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இந்த கூட்டத்தை தொடங்கிவைத்து இந்த திட்டம் பற்றி எடுத்துரைத்தார். அதன்பின்பு இந்த திட்டம் பற்றி தொழிற்சாலையின் சார்பாக விளக்கப்பட்டது. பின்பு பொதுமக்கள் தங்களது கருத்துக்களை தெரிவித்தனர்.

**I.இந்த கூட்டத்தில் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பின்வருமாறு:**

**1. திரு.C.சுடலை, மேலதட்டப்பாறை:**

- எனது கிராமத்தில் கடந்த காலங்களில் கல்குவாரிகள் நடைபெற்று கொண்டிருந்தது. தற்போது முன்பு போல் கல்குவாரிகள் இல்லை. எனவே, கல்குவாரிகள் தொடர்ந்து நடந்தால் எங்களுக்கு ஜல்லி, கல் மற்றும் கிராவல் எல்லாம் மலிவான விலையில் கிடைக்கும். மேலும், எங்கள் கிராமத்தில் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்புகளும் கிடைக்கும். அதனால், இந்த கல்குவாரியை தொடங்க அனுமதி அளிக்க வேண்டும்.

**2. திரு.B.கோபாலகிருஷ்ணன், மேலதட்டப்பாறை :**

- மேலதட்டப்பாறையில் தொழிற்வளர்ச்சி போதுமானதாக இல்லை, ஒரு கல்குவாரியும் செயல்படாததால் வேலை இல்லை. எனவே, இந்த குவாரியை செயல்பட அனுமதிக்க வேண்டும். இதன் மூலம் வேலை வாய்ப்புகள் உருவாகும்.

**3. திரு.P. வெயில்ராஜ், கீழகூட்டுடன்காடு :**

- இந்த கல் மற்றும் சரளை குவாரி அமைவதை வரவேற்கிறேன். ஏனென்றால், இங்கு மக்கள் பலநாள் தொழில் இல்லாமல்

சங்கடப்படுகிறார்கள். எனவே, தொழில் செய்ய ஏதுவான சூழல் ஏற்படுத்தி தரவேண்டும்.

4. திரு.லெட்சுமணன், மேலதட்டப்பாறை :

- எங்கள் ஊரில் குவாரி கண்டிபாக வர வேண்டும். ஏனெனில் எல்லா மக்களுக்கும் வேலை வாய்ப்பு அதிகமாக கிடைக்கும். கடந்த ஐந்து, ஆறு வருடங்களுக்கு முன்பாக நிறைய குவாரிகள் எங்களது கிராமத்தில் இருந்தது. அதனால் வேலைவாய்ப்பு நிறைய கிடைத்தது. தற்போது வேலை தேடி வெளியூர் செல்ல வேண்டியுள்ளது. மேலும், அங்கு நிரந்தர வேலையில்லாமல் திரும்பி வரவேண்டி உள்ளது. எனவே, ஒரு குவாரி அல்ல இரண்டு குவாரி வந்தாலும் நல்லதுதான். மேலும், கிழதட்டப்பாறை, உமரிக்கோட்டை மற்றும் கல்லம்பரும்பு ஆகிய ஊர்மக்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும். அதனால், குவாரியை அமைக்க அனுமதி அளிக்க வேண்டும்.

5. பெயர்குறிப்பிடாத நபர் :

- கிழதட்டப்பாறை, உமரிக்கோட்டை, மடத்துப்பட்டி சுற்றியுள்ள கிராமங்களுக்கு எங்கள் ஊர் தாய் கிராமம். முன்னர் ஒரு காலத்தில் இந்த தொழிலை வைத்துதான் வாழ்ந்து வந்தோம்.இதுதான் எங்கள் வாழ்வாதாரம். படித்த மக்கள் நிறைய இருந்தாலும், படிக்காத மக்கள் நிறைய உள்ளனர். அவர்களுக்கு, கல்குவாரியை தவிர வேறு வேலையே தொரியாது. வேலையில்லாமல் மக்கள் அங்குமிங்கும் அலைகிறார்கள். கொத்த வேலைக்காக வெளியூர் செல்கிறார்கள். எனவே, எங்கள் வாழ்வாதாரத்தை மீட்டுத் தரவேண்டும்.

6. திரு.சண்முகசுந்தரம், மேலதட்டப்பாறை 9-வது வார்டு உறுப்பினர் :

- எனது கிராமத்தில் 12 குவாரிகள் இயங்கியது. ஆனால், தற்போது இரண்டு குவாரிகள் மட்டுமே இயங்குகிறது. அதனால், அரசாங்கம் மற்ற குவாரிகள் இயங்குவதற்கான உரிமத்தை ஏற்படுத்தி தந்தால் எங்கள் மக்கள் அங்கே வேலை செய்வார்கள், அவர்கள் வாழ்வாதாரமும் நன்றாக இருக்கும். வியாபாரிகளுக்கும் நன்றாக வியாபாரம் நடக்கும். எனவே, இந்த குவாரிக்கும் இனி வரும் குவாரிக்கும் உரிமம் வழங்க வேண்டும்.

7. திருமதி.சந்தனமாரி, மேலதட்டப்பாறை :

- எனது பெற்றோர்கள் எங்களை கல்குவாரியில் வேலை செய்துதான் வளர்த்தார்கள். பல வருடங்களாக கல்குவாரிகள் செயல்படாமல் முடங்கிப்போயுள்ளது. அதனால், நிறையபேர் வேலைவாய்ப்பு இன்றி கஷ்டப்படுகிறார்கள். எனவே, கல்குவாரிக்கு அனுமதியளித்து செயல்படுத்தினால் அநேகருக்கு அது பயனுள்ளதாயிருக்கும்.

8. திரு.பொன்னுத்துரை, மேலதட்டப்பாறை :

- இந்த குவாரி செயல்பாட்டுக்கு வந்தால் வீடுகட்டுவதற்கு கல், சரளை முதலியவை சவுரியமாக கிடைக்கும். எனவே, இந்த குவாரிக்கு அனுமதி அளிக்க வேண்டும்.

9. திருமதி.பாஞ்சாலி, மேலதட்டப்பாறை :

- வேலையில்லாமல் அலைகிறோம். எனவே, வேலைக்கு ஏற்பாடு செய்து தரவேண்டும்.

10. <u>திரு.லெட்சுமணன், கீழ்தட்டப்பாறை :</u>

- நாங்கள் வாகனம் வைத்துள்ளோம். கல், மணல் தட்டுப்பாட்டால் எங்களுக்கு கல் கிடைப்பதில்லை மற்றும் தொழில் செய்ய இயலவில்லை. எனவே, அது கிடைப்பதற்கு உதவி செய்ய வேண்டும்.

**II.** இந்த கருத்து கேட்பு கூட்டத்தில் பொது மக்களிடமிருந்து இந்த திட்டம் அமைய ஆதரவு தெரிவித்து எழுத்து பூர்வமாக பெறப்பட்ட மனுக்கள் (29 Nos) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு – III).

**III.** இந்த திட்டம் அமைய எதிர்ப்பு தெரிவித்து இந்த கருத்து கேட்பு கூட்டத்தை ரத்து செய்ய கோரி திரு.ந.சண்முகம் BSc., PGDCA., L.L.B., சட்டவிரோத கல்குவாரி எதிர்ப்பு இயக்கம், தமிழ்நாடு மாசு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கம், 47-A, பசுபதி லேஅவுட், கரூர்-639001 என்பவரிடமிருந்து எழுத்துபூர்வமாக இணையதளம் மூலம் பெறப்பட்ட மனுவானது இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு – IV).

<u>பொது மக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கையுடன் கீழ்கண்ட ஆவணங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.</u>

1. பொது மக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கைகள் பதிவு செய்யப்பட்ட காணொளி அடங்கிய குறுந்தகடுகள் (எண்ணம் - 2) இணைப்பு I-ல் இணைக்கப்பட்டுள்ளது.
2. பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்கேற்றவர்கள் பற்றிய விபரம் இணைப்பு II-ல் இணைக்கப்பட்டுள்ளது.
3. ஆலை அமைவதை வரவேற்று எழுத்து பூர்வமாக பெறப்பட்ட மனுக்கள் இணைப்பு III-ல் இணைக்கப்பட்டுள்ளது.
4. இந்த திட்டம் அமைய எதிர்ப்பு தெரிவித்து இந்த கருத்து கேட்பு கூட்டத்தை ரத்து செய்யகோரி எழுத்து பூர்வமாக பெறப்பட்ட மனு இணைப்பு IV- ல் இணைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
தூத்துக்குடி.

மாவட்ட ஆட்சியர்,
தூத்துக்குடி மாவட்டம்.

6/7